மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதுவரையில் அவர்களுக்கு வாடகைக்கு வீடுகள் கொடுக்கும் திட்டம்தான் இருக்கிறது. அவர்களுக்குச் சொந்தமாக நில ஆர்ஜிதம் செய்யும் திட்டம் இல்லை. அவர்களெல்லாம் நகராட்சி மன்றங்களைச் சேர்ந்த இடங்களைச் சுற்றிவந்து நகர மக்களுக்குப் பணி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், அவர்கள் நகரத்திலே வாழ வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அந்தத் தொழிலில் மாறி மாறி வந்துகொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கே கொடுத்துவிட்டால், அவர்களுக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டால், மற்றபடி வருகிற தொழிலாளர்களுக்கு நகரத்தில் இடம் கொடுப்பது கஷ்டமாகிவிடும். எனவே, நகரத்திலே பணி புரியும் நகர சுத்தித் தொழிலாளர்கள் நகர வட்டாரத்திலே பணி செய்கிறார்கள், அங்கே வீடுகளைக் கட்டி வாடகைக்குக் கொடுக்கும் வகையிலேதான் இப்பொழுது திட்டம் இருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள், நகர சுத்தித் தொழிலாளர்களின் சம்பளம், பஞ்சப் படி, வீட்டு அலவன்ஸ் குறைந்த அளவாக மூன்று ரூபாய் கொடுக்கிறார்கள் என்று தெரியும். ஆகவே, சர்க்கார் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து குறைந்த பட்சம் அவர்களுக்குக் குடியிருப்பு வீடுகளைக் கட்டி இலவசமாகக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் அதைத் தான் சொன்னேன். நாங்கள் அதைப் பற்றிப் பரிசீலனை செய்தோம், அவர்களுக்குச் சொந்தத்திலேயே வீடுகளைக் கொடுக்க வேண்டுமென்று. நகரத்திலே பணி செய்பவர்கள் அவர்கள், குறிப்பிட்ட சில பேர்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவரே அந்தப் பணியைச் செய்வது கிடையாது. தொடர்ந்து பல பேர் வருகிறார்கள். நகராட்சியில் பணி செய்பவர்களுக்கு, நகராட்சி மூலம் கட்டித் தரும் வீடுகளைச் சொந்தமாகக் கொடுத்துவிட்டால், அடுத்தடுத்து வருபவர்களுக்குக் கொடுக்க முடியாது. அப்படி வருபவர்களுக்கும் நகரத்திலேயே எப்படிக் கொடுப்பது ? அவர்கள் நகரத்திலேயே பணி செய்ய வேண்டியிருப்பவர்கள். ஆகவே, இந்தச் சிக்கல் இருப்பதால் பணி செய்யும் வரையில் வாடகை வீடாகக் கொடுத்து விடலாம் என்றும், ஓய்வு பெற்ற பிறகு, கிராமத்திலே அவர்கள் வாழும் நிலையிருந்தால் அரிசன மக்களுக்குத் தருவதைப் போல், இலவசமாகக் கொடுக்கலாம் என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இன்றையதினம் நகர சுத்தித் தொழிலாளர்கள் சுத்தமில்லாத இடங்களில், வீட்டு வசதி இல்லாமல் பல இடங்களில் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது, வாடகை அடிப்படையில் வீடு கட்டிக் கொடுக்கப் படுவதாகச் சொன்னார்கள். அப்படி எத்தனை நகரசபைகளில் வாடகை அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் எத்தனை நகரசபைகளில் வீட்டு வசதியில்லாமல் நகர சுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தத் தகவல் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அடுத்த முறையாவது பதில் சொல்லலாம்.

Family and Child Welfare Projects.

***716 Q.—Thiru K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Government proposes to extend the family and child welfare programmes to more Panchayat Union Blocks in the State ; and

(*b*) if so, what they are ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1968–69–ல் செங்கற்பட்டு மாவட்டம் வில்லிவாக்கம் வளர்ச்சி வட்டாரத்தில் ஒன்றும், தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி வளர்ச்சி வட்டாரத்தில் ஒன்று

மாக, குடும்ப நல, குழந்தைகள் நலத் திட்டங்கள், திட்டப் பணிகள் இரண்டு தொடங்கப் பெற்றன. 1969–70–ல், கோயம்புத்தூர் மாவட்டம் பெரிய நாயக்கனபாளையத்தில் ஒன்றும், மதுரை மாவட்டம் ஆத்தூரில் ஒன்றுமாக மேலும் இரண்டு திட்டங்கள் தொடங்கப் பெற்றன. இவற்றைத் தவிர, வேறு திட்டங்கள் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

One orchard for each district.

*** 717 *Q.*—Thiru K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether as, has been recommended by the Estimates Committee, it is proposed to establish one orchard for each district, when there are assured irrigation facilities available ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இம் மாநிலத்தில், எட்டு மாவட்டங்களில் ஒன்பது மாதிரிப் பழத் தோட்டங்கள் செடி வளர்ப்புப் பண்ணைகள் முன்னமேயே உள்ளன. இருப்பினும், பாசன வசதி உறுதியாகக் கிடைக்கும்போது மாவட்டம் ஒவ்வொன்றிலும் பழத் தோட்டம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து மதிப்பீட்டுக் குழு செய்த பரிவுரை அரசின் ஆலோசனையில் உள்ளது.

முதலமைச்சரின் இலங்கைப் பயணம்.

***732 வினு.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலங்கைப் பயணம் எப்போது என முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிவந்த கலைஞர் அவர்கள் தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் ஆட்சிபுரிவதை அறிந்து, அவர்களைக் காண இலங்கைத் தமிழர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில், தமிழக முதல் அமைச்சர் அவர்கள் விரைவில் இலங்கைக்குச் சென்று வர முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் செல்வதற்குத் தடை இல்லை. ஆனால், அவர்கள் அழைப்பதற்குத்தான் தடை விதிக்கிறார்கள்.

திரு. கே. விநாயகம் : பொதுவாக சிலோன் நாட்டில் ஏற்பட்டிருக்கிற அரசியல் சந்தேகத்தின் விளைவாக நமது ராஜ்யத்திலிருந்து எந்த டி.எம்.கே. கட்சித் தலைவர்களும் அங்கு வரக் கூடாது என்று அவர்கள் "Ban" செய்ததாகக் கேள்விப்படுகிறேன். இதை மத்திய சர்க்காருக்கு, நம்முடைய சர்க்கார் எடுத்துச் சொல்லி, நாங்கள் போவது அங்கே இருக்கிற குழப்பத்தை அதிகப்படுத்துவதற்காக அல்ல, கலாசாரப் பிரசாரத்திற்காகப் போகிறோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி, எப்படியாகிலும் தமிழ்க் கலையை அங்கே பரப்புவதற்கு முதல் அமைச்சர் போக முயற்சிப்பாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் இலங்கைக்குச் செல்ல வேண்டுமென்று எதிர்க் கட்சியில் இருந்தபொழுது விரும்பிய நேரத்தில் அப்பொழுது இங்கு இருந்த அரசு தடுத்தது. நான் ஆளும் கட்சிக்கு வந்த பிறகு அங்கிருக்கும் அரசு தடுக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இலங்கை தி.மு.க.-விற்கும், தமிழ் நாட்டிலுள்ள தி. மு. க.-விற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று